

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (03.08.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், சேலம் மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் மன்மதன், திருச்சி மண்டல நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் தயாளகுமார், மேல் காவிரி வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர் இராமலிங்கம், மேட்டூர் அணைக் கோட்ட செயற்பொறியாளர் சிவக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (04.08.24) தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2024ல் பங்கேற்க, இணையதள முன்பதிவினை (online registration) துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘தமிழ்நாட்டில் - உயர் கல்வி பயில்வோர் எண்ணிக்கை 100%ஐ எட்ட வேண்டும்’ எனும் உயரிய நோக்கில் இளைய சமுதாயத்தைக் கொண்டு செல்லும்

# இளம் தலைவராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திகழ்கிறார்!

## தனியார் பள்ளிகள் பாராட்டு விழாவில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஆக.5

**100 சதவீத தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளைப் பாராட்டி நடைபெற்ற விழாவில் உரையாற்றிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, “தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்வோர் எண்ணிக்கையை 100 சதவிகிதம் எட்ட வேண்டும் எனும் உயரிய நோக்கில் இளைய சமுதாயத்தைக் கொண்டு செல்லும் இளம் தலைவராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்கள் திகழ்கிறார்!” எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

2023-2024ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற சர்வதேச / தேசிய / மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவ/மாணவியர்களுக்கு பாராட்டு விழா மற்றும் 10,12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100 சதவிகித தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

2023-2024ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற சர்வதேச அளவில் நடைபெற்ற போட்டியில் 68 தங்கப்பதக்கங்களையும், தேசிய/மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் 2,489 பதக்கங்களையும், வென்ற மாணவ / மாணவியர்களுக்கும், 10 ஆம் வகுப்பில் 2,283, தனியார் பள்ளிகள் 12ஆம் வகுப்பில் 1,760 தனியார் பள்ளிகள் அரசு பொதுத் தேர்வுகளில் 100 சதவித தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

தனியார் பள்ளி முதல்வர்கள், மாணவர்களுக்கு முதல் முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக யாரை அழைப்பது என்ற போது தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது எங்களை வழி நடத்தி அதன் பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டு மாணவர்களை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லும் பணியினைச் செய்து வருகிறார். இவரை அழைத்து தனியார் பள்ளி முதல்வர்கள், மாணவர்களைப் பாராட்டினால் மிகச் சரியாக பொருத்தமாக இருக்கும் என கருதினோம்.

பள்ளிக் கல்வி துறையின் சார்பாக அரசுப் பள்ளி மாண



வர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம். இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், “தமிழ்நாட்டிலுள்ள தனியார் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நம் மாநிலத்தில் தானே இருக்கிறார்கள், அவர்களுக்கு எப்போது பாராட்டு விழா நடத்தப் போகிறீர்கள்!” என்று அறிவுறுத்திய போது - தனியார் பள்ளி முதல்வர்கள் மற்றும் மாணவர்களுக்கு நடத்த ஏற்பாடு செய்தோம். இதே நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அப்போது முதலமைச்சர் அவர்கள், “பள்ளிக் கல்வித் துறையில் நடைபெறும் விழாக்களில் ஆர்வமுடன் கலந்து கொள்வேன். ஆனால் எனக்கு முன்பாகவே இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் பள்ளிக் கல்வித் துறை நடத்தும் விழாக்களில் ஆர்வமுடன் பங்கேற்று வருகிறார்” எனத் தெரிவித்தார். இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய விழாவிற்கு ரிசர்வ் செய்து பங்கேற்று வருகிறார்கள். தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் மாணவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் எண்ணிக்கை சுமார் 52 சதவீதம் உள்ளது. வரும் 10 ஆண்டுகளில் 100 சதவீகிதத்தை எட்ட வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. இளைய சமுதாயத்தினைக் கொண்டு செல்கின்ற ஒரு இளம் தலைவராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் செயல்பட்டு வருகிறார். இவர் மூலமாக தலைமை ஆசிரியர்களை ஏன் பாராட்டுகிறோம் என்று சொல்லும் போது, பல ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து தான் வெற்றியினைக் கொடுக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக ஆசிரியர்களுக்கான அங்கீகாரமாக தலைமை ஆசிரியர்களை அழைத்துப் பாராட்டுகிறோம். அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தினால் மட்டும் போதாது, தனியார் பள்ளி மாணவர்களையும் ஊக்கப்படுத்தினால்தான் இந்த இலக்கினை எட்டிட முடியும். எனவே தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரை அரசுப் பள்ளி மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் அனைவரையும் ஒன்றாகவே பார்க்கிறோம். தனியார் பள்ளி மாணவர்கள் அரசுப் பள்ளிகளை நோக்கி வாருங்கள். அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தும் திட்டங்களை அறிந்து கொள்ளுங்கள்! அதேபோல தனியார் பள்ளிக்கு அரசுப் பள்ளி மாணவர்கள் சென்று அங்கு செயல்படுத்தும் பாடத்திட்டங்க ளை அறிந்து கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் பார்த்து கற்றுக் கொண்டு தங்களை மேம்படுத்திக்கொள்ளுங்கள். எந்தப் பாரபட்சமுமின்றி இளைய சமுதாயத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.

முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் பள்ளிக் கல்வித் துறை, மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய ஐந்தும் ஒன்றிணைந்தால் தான் மாணவச் செல்வங்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும். 100 சதவித தேர்ச்சியினைத் தரும் பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் பாராட்டு விழா நடைபெறும், மேலும் இவ்விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த ஆசிரியர் சங்கங்கள் மற்றும் தனியார் பள்ளிச் சங்கங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

### புதுச்சேரி முதலமைச்சர்

# ரங்கசாமிக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஆக. 5-

புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**தாங்கள் நீண்டகாலம் நல்ல உடல்நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் திகழ விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

### தேனி வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!

தேனி, ஆக. 5-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 அன்று தேனி வடக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது, என்று தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் அறிக்கையில் அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை பின்வருமாறு.

முத்தமிழறிஞர் கலைஞர் தனது எழுத்து திறன், அரசியல் ஆற்றல், மற்றும் சமூக நலனுக்காக செய்த பணிகள் மூலம் தமிழர்களின் மனதில் நிலைத்தவர். அவரது படைப்புகள், சாதனைகள், மற்றும் சமூக மாற்றத்திற்காக அவர் ஆற்றிய சேவைகள் மக்கள் மனதில்



என்றும் நிலைத்து நிற்கும். நாவில் செந்தமிழின் இனிமையும், வீரியத்தை யும், மென்மையையும், மேன்மையையும் களிநடம் புரிய வைத்த கன்னித்தமிழ் படைப்பாளியாக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து முதலமைச்சர்களுக்கும், பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கலைஞர் செய்து நிறைவேற்றிய திட்டங்கள், நிறைவேற்றிய சாதனைகளின் மூலமாக இன்னும் நூறு ஆண்டுகளுக்கு அவருடைய பெயர் இந்த நாட்டில் நினைவு கூறப்படும். முத்தமிழின் முகவரியாக, புகழ் சின்னமாக ஒளி வீசும் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வாக 07.08.2024 புதன்கிழமை, அன்று தேனி வடக்கு மாவட்டத்தில் ஒன்றியம், நகரம், பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செய்து வீர வணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருச்சி – பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சி.பா. ஆதித்தனார் அறக்கட்டளை –

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - தேசியக் கருத்தரங்கம்!

## பாரதிதாசன் உயராய்வு மையம் - கலைஞர் இருக்கை இணைந்து நடத்துகின்றன!

திருச்சி, ஆக.5

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் உயராய்வு மையம் - கலைஞர் இருக்கை இணைந்து நடத்தும் ‘தினத்தந்தி’ நிறுவனர் சி.பா. ஆதித்தனார் அறக்கட்டளை - முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - தேசியக் கருத்தரங்கம் 7.8.2024 பகல் 10 மணியளவில் குளிர்மை அரங்கத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ‘தினத்தந்தி’ மற்றும் முரசொலி பங்களிப்பு எனும் பொருளில் நடைபெறுகிறது.

விழாவில் பாரதிதாசன் உயராய்வு மைய இயக்குநர் - கலைஞர் இருக்கை ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.கோவிந்தராஜன் வரவேற்புரையாற்றுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் ‘தினத்தந்தி’ நிறுவனர் சி.பா. ஆதித்தனார் ஆகியோரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து நூல் வெளியிட்டு, பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் ம.செல்வம் தலைமையுரையாற்றுகிறார். பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் முனைவர் பா.ஜெய பிரகாஷ் சிறப்புரையாற்றுகிறார்.

முற்பகல் 11 மணியளவில் முதல் அமர்வாக அமர்வுத் தலைவர் தாவரவியல் துறை பேராசிரியர் முனைவர் அ.இலக்குமி பிரபா தலைமையில் கட்டுரையாளர்கள் முனைவர் பி.செல்வக்குமரன் -‘தினத்தந்தி - பங்களிப்பு’ எனும் தலைப்பிலும், முனைவர் நீ.சரவணன் - ‘முரசொலியின் மொழி நடை’ எனும் தலைப்பில் கட்டுரை சமர்ப்பிக்கின்றனர்.

பிற்பகல் 2 மணியளவில் 2-வது அமர்வாக அமர்வுத் தலைவர் முனைவர் ஜெ.சந்திரகலா - தலைமையில் ‘பெண்கள் முன்னேற்றத்தில் தினத்தந்தியின் பங்கு’ எனும் தலைப்பிலும், கட்டுரையாளர்கள் முனைவர் அ.சையத் ஜாகிர் ஹசன் - கலைஞரின் வான் புகழ் கொண்ட வள்ளுவம்’ எனும் தலைப்பிலும், முனைவர் பொ.இரமேஷ் - முரசொலி நாளிதழின் மக்கள் அணுகுமுறை எனும் தலைப்பிலும் கட்டுரைகளை சமர்ப்பிக்கின்றனர்.

மாலை 3 மணியளவில் 3வது அமர்வாக அமர்வுத் தலைவர் முனைவர் மூ.பாலகிருஷ்ணன் - ‘கலைஞரும் முரசொலியும்’ எனும் தலைப்பிலும் - கட்டுரையாளர்கள் முனைவர் அ. ஜெசிந்தா ராணி - ‘கலைஞரின் கவிதை நடை’ எனும் தலைப்பிலும், முனைவர் ரெ.நல்லமுத்து - ‘முரசொலி நாளிதழ் ஆற்றிவரும் இதழியல் பணியும் மக்கள் பணியும்’ எனும் தலைப்பிலும் கட்டுரைகளை சமர்ப்பிக்கின்றனர்.

மாலை 4 மணியளவில் நிறைவரங்கத்தில் தலைமையுரையாற்றி சான்றிதழ்களை பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஆர்.காளிதாசன் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் முனைவர் மோ. பாட்டழகன், கவிஞர் ஆலந்தூரர் கோ.மோகன ரங்கம் (தமிழியல் ஆய்வு மையம், சென்னை) ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முனைவர் அ.கோவிந்தராஜன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவ - மாணவியர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### செயலற்றவர்களாக இருப்பதோடு –

# ஆளுநர்கள் தங்கள் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதில்லை!

## உச்சநீதிமன்ற நீதிபதி கருத்து!

பெங்களூரு, ஆக.5-

ஆளுநர்கள் தங்கள் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதில்லை என உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா கருத்து தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற தேசிய சட்ட பல்கலைக்கழக கருத்தரங்கில் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா கலந்துகொண்டார். அப்போது, பேசிய அவர், இன்றைய காலகட்டத்தில் சில ஆளுநர்கள் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை செய்யாமல் செயலற்றவர்களாக உள்ளதாகவும், தாங்கள் செய்யக்கூடாத செயல்களை அவர்கள் செய்து வருவதாகவும் தெரிவித்தார். ஆளுநர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவாகி வருவது மிகுந்த கவலை அளிப்பதாகவும் நீதிபதி நாகரத்னா கூறினார்.

ஆளுநரின் நடுநிலைமை குறித்து அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்களை மேற்கோள்காட்டி பேசிய நீதிபதி நாகரத்னா, ஆளுநர் பதவி நல்லிணக்கத்தின் ஒரு அங்கமாக இருக்கும் என்று நினைத்ததால் அரசியல் அமைப்பின் ஒரு பகுதியாக ஆளுநர் பதவி உருவாக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆளுநர்கள் தமது கடமைகளை உணர்ந்து நன்றாக செயல்பட்டால் முரண்பட்ட வர்களிடையே ஒருவித புரிதலையும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

ஆளுநர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும், கட்சி விவகாரங் களுக்கு ஆளுநர்களை பயன்படுத்தக் கூடாது என்பதே அரசியல் நிர்ணய சபையின் முக்கிய ஆலோசனையாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பலப்படுத்த, அரசியல் சாசன முகவுரையில் குறிப்பிட்டுள்ள கூட்டாட்சி, சகோதரத்துவம், அடிப்படை உரிமைகள், கொள்கை ரீதியான நிர்வாகம் ஆகிய நான்கையும் வலியுறுத்த வேண்டும் என்றும், மாநில அரசுகள் திறனற்றவை என்றோ, கீழ் படிந்தவையாகவோ கருதக்கூடாது என்றும், அரசியலமைப்பின்படி ஆட்சி என்பதே நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் கூறிய நீதிபதி நாகரத்னா, ஆளுநர்கள் ஒருசார்பான, அற்பத்தனமான செயல்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

மாநில ஆளுநர்களுக்கு எதிராக கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், பஞ்சாப் போன்ற மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ள நிலையில் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா இக்கருத்துக்களை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




தாம்பரம் மாநகராட்சி மண்டலம் – 4 – 53வது வார்டு TTK நகர் மைதானத்தில் TAMIL NADU VISION GOLD MEDAL தாம்பரம் மராத்தான் 2024, மற்றும் VGKBUILDERS ஆதரவாளர்கள் சார்பாக இப் போட்டியினை J. மேகநாத் ரெட்டி IAS (Member Secretary Sports Development Authority of Tamilnadu) தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா. எம்.எல்.ஏ. ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தனர். உடன் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், 53வது மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, மற்றும் டி.ஜி.ஆர்.பாபு உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



**திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். ‘நடிப்பிசைப்புலவர்’ என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.**

**தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.**

**“பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**